# இளைஞர் எழுச்சி நாயகன்

# 2010



பாவனி , திருமுறைமணி கண்ணப்பர் விசாகக்குழுவின் சார்பில் த.ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் சமூகமேம்பாட்டுப் பணிகளைப் பாராட்டியும் , குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் அவரது செயற்பாட்டை அங்கீகரித்தும் அவருக்கு ‘ இளைஞர் எழுச்சி நாயகன் ‘ என்ற தலைப்புடனான பாராட்டுப் பட்டயம் வழங்கப்பட்டது.

இதற்கென நடத்தப்பட்ட சிறப்புப் பாராட்டு நிகழ்வு 10.10.2010 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தோட்டாணி , திருவாச்சி சின்னியம்பாளையத்திலுள்ள ஆலய வளாகத்திற்குள் திருமுறைமணி கண்ணப்பர் விசாகக்குழுவின் தலைவர் ஆசிரியர் திரு சி. கந்தசாமி , ஈரோடு ஏ.இ.டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் திரு சி. காசியண்ணன் அகியோர்

இணைந்து இப்பாராட்டு மடலை வழங்கினர். அனைத்து விசாகக்குழு உறுப்பினர்கள் , ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



உ
ஓம் முருகா சரணம்

திருமுறைமணி கண்ணப்பர் அவர்களின்
விசாகத் திருப்பயண விழா

தோட்டாணி திருவாச்சி சின்னியம்பாளையத்தில் 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை நடந்த
435 -ஆவது திருப்பயண விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்த
பெருந்தகை, 'ஈரோடு – மக்கள் சிந்தனைப் பேரவை'த் தலைவர்.
" இளைஞர் எழுச்சி நாயகன் "
திருமிகு. த. ஸ்டாலின் குணசேகரன் B.Sc., B.L., அவர்களுக்கு
வாசித்தளித்த பாராட்டு வாழ்த்து இதழ்

நிறை அருளை நித்தம் நித்தம் வழங்கி! வாழ்வில் நல்ல
நிறைவுகளைத் தந்தருளும் பழனிக் கந்தசாமி கருணையால்!
குறை ஒன்றும் இல்லாத திருமுறைமணி கண்ணப்பர் தம் வழியில்
குவித்தபுகழ் விசாகத் திருப்பயண திகழ்சீர் பொலிவுபெற!
நிறைவான, நிலையான, தோட்டாணி சின்னியம்பாளையத்தில்
நிலைத்தபுகழ்ச் சன்றோர்தாம் வாழ்த்திடவே நீவீர்!
குறையாத குளிர்தமிழால் போற்றி வழங்கிடவே வாரீர்!
குவலயமே நாடோறும் குறித்திடவும் போற்றிடவும் வாரீர்!

சீர் ஏற்றம்பெற செல்வநலம் கனிந்த மாணிக்கம்பாளையத்தில்
சிறப்புஓங்க வழிவழியாய் உலகுஊட்டும் உழவுத்தொழிலால்!
பார்போற்றும் திகழ்புகழ் பூந்துறை காடைகுலத் தோன்றல்!
பண்புநிறை தங்கமுத்து! லட்சுமி அம்மாள்! செய்தவத்தால்!
ஊர்போற்ற! உலகுபோற்ற! உம்மைப்பெற்றார்! உயர்புகழே பெற்றார்!
உயர் ஸ்டாலின் குணா! உம்தாய்! ஈன்ற பொழுதின் உவகை பெற்றார்!
சுவர்ஏற்றமதி நலத்துக் கொள்கைச் செம்மல்! குன்றா உளநலத்தீர்!
ஊர் ஏற்றம் பெற! இளைஞர் உலகு! ஏற்றம்பெற! உழைக்கும் உத்தம! உந்தன்
பேர் ஏற்றம் பெறும்! மக்கள் சிந்தனைப் பேரவையால்! என்றும்! நன்றாய்!

ஆல்போல் தழைத்து! அருகுபோல் நிலைத்து! அணிஅணியாய்
ஆயிரம், ஆயிரம், இளைஞர்! ஆர்வமாய் எழுச்சி கொள்ளச் செய்கிறீர்!
நூல்கள் படைக்கிறீர்! வீட்டுக்கொரு நூலகம்! தேவை! நும்சேவை! என
நூல்கள் பரணிபாட! புத்தகத்திருவிழாவில் புத்துலகம் படைக்கிறீர்!

இளைஞர் எழுச்சி இயக்கமும், பாரதி, பகத்சிங் இளைஞர் மன்றங்களும் சமைத்தீர்!
இளைஞர் எண்ணத்தில் இனிக்கின்ற எழுச்சி நாயகன் ஸ்டாலின் குணசேகர்!
இளைஞரின் நம்பிக்கை நட்சத்திரம்! உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை!

ஈராயிரம் மைலுக்கப்பால் ரஷ்யாவின் புகழ் ஸ்டாலினால் உயர்ந்தது!
ஈரோட்டின் புகழ்! தமிழகத்தின் புகழ்! ஸ்டாலின் குணசேகரால் உயர்கிறது!

மனிதரை நேசிக்கும் மாண்பு!
செய்ந்நன்றி மறவாச் சீர்மை!
பிறர்க்கென வாழும் பெற்றி!
இளைஞர்க்கே நல்வழி காட்டி!
மங்காத சுடர்ஒளியாய் மாநிலமே பேசும்!
மாசற்ற உள்ளத்தின் உயர்குணங்கள் வாசம்!

பாட்டுக்கு ஒரு புலவன் நம் பாரதி கனவு மெய்ப்பட! பாரதம் நல்ல வல்லரசாக!
ஏட்டுக்குள் அடங்கா அறிவு, ஆர்வம், லட்சியம், நம்பிக்கையால்!
நாட்டுக்கே நலம் பெருக்கும் நல்ல சேவையால்! உம்மைப்போலே!
வீட்டுக்கு ஒரு மைந்தன்! தமிழகப் பட்டிதொட்டி எங்கும்! தோன்ற வேண்டும்!

ஞாலத்தில் நிறைசெல்வம், வாழ்நாளும், நீள்புகழும் பெற்றே! ஓங்கும்
சீலத்தில் சிறந்த திருக்குறள் போல்! மறைக்கீதை மணிமொழி போல்!
காலத்தில் நிலைத்திட்ட காவியமாய் வாழி! வாழி! நலம் சூழ!

உளம் நிறைவுடனே நலம் பெற வாழ்த்தும்

சின்னியம்பாளையம்
10.10.2010

C.கந்தசாமி M.A., M.Ed., காளிங்கராயன்பாளையம் பழையூர்
தலைவர், திருமுறைமணி கண்ணப்பர் விசாகக்குழு, பவானி.